Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 255 | உள்ளூர் - 12.09.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 255 | வெளியூர் - 13.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**புரட்டாசி மாத ராசிபலன்; 6 ராசிகள் உஷார்!**

**டி.என்.பி.எஸ்.சி. 170 காலியிடங்கள்!**

**“சில்வர்ஸ்டோனில் அஜித் ... முதல்வர் விஜய்?**

**குப்பையில்லா மதுரையாக மாறுமா “தூங்கா நகரம்”?**

## 3 பெண் உதவியாளர்களுக்கு தலா ரூ.45 லட்சம்! ட்ரம்ப்புக்கு வலுக்கும் எதிர்ப்பு!

வாஷிங்டன், செப். 12–

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தனது மூன்று பெண் உதவியாளர்களுக்கு கிறிஸ்துமஸ் சிறப்புப் பரிசாக தலா ரூ.45 லட்சம் ரொக்கமாக வழங்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.



இந்தப் பெரும் தொகை ட்ரம்ப்பின் சொந்தப் பணமா அல்லது அரசு நிதியா? என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. பரிசு வழங்கப்பட்டது சட்ட மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்டதா என்ற விவாதமும் எழுந்துள்ளது.

இந்தத் தொகை அதிகாரப்பூர்வ பணிகளுக்கு அப்பாற்பட்டு தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டதாக வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கிக் கடன் ஆவணப் பதிவு: செப்.15 முதல் புதிய நடைமுறை!





சென்னை, செப். 12–

வங்கிக் கடன் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்ய செப்.15 முதல் நேரில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. தமிழக பதிவுத்துறையின் ‘ஸ்டார் 3.0 எங்கேயும் பதிவு’ திட்டத்தின் கீழ், உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு மற்றும் கடன் திருப்பிச் செலுத்தியதற்கான ரசீது ஆவணங்கள் இனி இணையவழியில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும். இதனால் வங்கி மற்றும் நிதி நிறுவன அதிகாரிகள் சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டியதில்லை. டிஜிட்டல் கையொப்பம், QR குறியீடு உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளால் ஆவணப் பதிவு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நடைபெறும்; மோசடிகளையும் கட்டுப்படுத்த முடியும் என பதிவுத்துறை தெரிவித்துள்ளது.

## 2027 மார்ச் முதல் ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல்: மத்திய மந்திரி நிதின் கட்காரி!

மும்பை, செப். 12–

2027 மார்ச் முதல் ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என மத்திய மந்திரி நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.



மும்பையில் நடைபெற்ற சர்வதேச நிதி தொழில்நுட்ப மாநாட்டில் பங்கேற்ற மத்திய மந்திரி நிதின் கட்காரி ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் திட்டம் குறித்து கூறியதாவது:

சுங்கச் சாவடிகளில், வாகன ஓட்டிகள் நிற்காமல் தடையின்றி செல்லும் வகையில் செயற்கைக்கோள் உதவி, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ), பாஸ்டேக் இணைக்கப்பட்ட தொழில்நுட்பம் மூலம் 2027 மார்ச் முதல் சுங்கக்கட்டணம் வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் நடைமுறை சோதனை அடிப்படையில் ஒரு சில சுங்கச்சாவடிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் 70 சதவீத சுங்கச் சாவடிகளில் ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

வரும் 2027–ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நாடு முழுவதும் 100 சதவீத அளவுக்கு ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். அப்படி நாடு முழுவதும் ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் முறை அமலாகும்போது, சுங்கச் சாவடி வசூல் மூலம் மட்டும் மத்திய அரசுக்கு ஆண்டுக்கு ரூ.25,000 கோடி வரை வருவாய் கிடைக்கும்.

ஃபாஸ்டேக் முறை அறிமுகப்படுத்தியதன் மூலம், சுங்கக் கட்டண வசூலும் அதிகரித்துள்ளது. முன்னர் ரூ.7 ஆயிரம் கோடியாக இருந்தது தற்போது ரூ.82 ஆயிரம் கோடிக்கும் மேல் வசூலாகிறது. அதுபோல, சுங்கச் சாவடி இயக்கச் செலவும் 12 சதவீதத்திலிருந்து 2 முதல் 3 சதவீதம் அளவுக்கு குறைந்தது.

சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் ஆண்டுக்கு 71 கோடி மணிநேரம், 56 கோடி லிட்டர் எரிபொருள் வீணாகும். சுங்கச் சாவடிகளில் முழுவதும் ஏ.ஐ. முறையில் சுங்கக்கட்டணம் வசூல் செய்யும் முறை அமல்படுத்துவது, வாகன ஓட்டிகளுக்கும் பலன் தரும். சுங்கச்சாவடிகளில் காத்திருக்க அவசியமில்லாமல் செல்ல முடியும் என்பதோடு, எரிபொருள் செலவும் மிச்சமாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தின் பல பகுதிகளில் மின்தடை ஏன்? - அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்!

சென்னை, செப். 12–

காற்றாலை மின்சாரம் தடைபட்டதால் தமிழகத்தில் இரண்டு நாள்கள் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட்டதாக அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.




தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர் மின்தடை ஏற்பட்டு வருகிறது. சென்னையில் பல பகுதிகளிலும் மின்தடை குறித்த புகார்கள் எழுந்துள்ளன. இதனால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அதேபோல நேற்று இரவு நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பகுதியில் தொடர் மின்வெட்டைக் கண்டித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென் மாநிலங்கள் முழுவதுமே இந்த மின்தடை பிரச்னை இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் மின்தடை குறித்து மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல்குமார் விளக்கமளித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “காற்றாலை மின்சாரம் தடைபட்டதால் இரண்டு நாட்கள் மின்சாரம் தட்டுப்பாடு ஏற்பட்டது. இது தமிழகத்தில் மட்டுமல்ல பெரும்பாலான மாநிலங்களில் நிலவும் தட்டுப்பாடு.

நேற்று மாலை தமிழகத்திற்கு தேவையான மின்சாரம் பொது விநியோகத்தில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது.

நேற்று மாலை முதல் அனைத்து இடங்களிலும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இது தமிழகத்தில் மட்டுமல்ல பெரும்பாலான மாநிலங்களில் நிலவும் தட்டுப்பாடு.

தமிழகத்தில் நேற்று மாலை முதல் போதுமான மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறோம்” என்று பதிவிட்டுள்ளார்.

## ‘புது தில்லி பிரகடனம்’?

# உலகின் பார்வை இந்தியா மீது! மோடி- புதின்- ஷி ஜின்பிங் ஒரே மேடையில்!

## உலகசக்தியை இணைக்கும் பிரிக்ஸ் மாநாடு!!

புதுதில்லி, செப். 12–

உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள பிரிக்ஸ் உச்சி மாநாடு, இந்தியா தலைமையில் தில்லியில் செப்.12, 13 ஆகிய இரு தினங்கள் நடைபெறுகிறது. பிரதமர் நரேந்திர மோடி, ரஷிய அதிபர் விளாதிமிர் புதின், சீன அதிபர் ஷி ஜின்பிங் உள்ளிட்ட முக்கிய உலகத் தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர். மாநாட்டு நிகழ்வுகள்: பிரிக்ஸ் மாநாடு அதிகார பூர்வமாக சனிக்கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு தொடங்கியது.




பிரிக்ஸ் அமைப்பில் இந்தியா, பிரேசில், ரஷியா, சீனா, தென்னாப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, இந்தோனேசியா ஆகிய 11 நாடுகள் இடம்பெற்றுள்ளன. பெலாரஸ், பொலிவியா, கஜகஸ்தான், கியூபா, மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா, உஸ்பெகிஸ்தான், வியத்நாம் உள்ளிட்டவை நட்பு நாடுகளாக உள்ளன. உலகின் முக்கிய பொருளாதார சக்திகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் நாடுகள், உலக பொருளாதார உற்பத்தியில் 40 சதவீதமும், உலக வர்த்தகத்தில் 26 சதவீதமும் பங்கு வகிக்கின்றன. இந்தியா தற்போது பிரிக்ஸ் அமைப்புக்குத் தலைமை வகிக்கிறது.

முதல் நாளில் ‘அனைவரையும் உள்ளடக்கிய சர்வதேச நிர்வாகம் மற்றும் பன்முகத்தன்மையை வலுப்படுத்துதல்’ குறித்து தலைவர்கள் ஆலோசிக்கின்றனர். தொடர்ந்து பாரத் புத்தாக்க கண்காட்சி, குழு புகைப்படம், மரக்கன்று நடுதல் நடைபெறுகிறது. இரவில் உலகத் தலைவர்களுக்கு பிரதமர் மோடி விருந்து அளிக்கிறார்.

இரண்டாவது நாளில் பிரிக்ஸ் மற்றும் நட்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்று மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு, நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய உலகளாவிய வளர்ச்சி குறித்து விவாதிக்கின்றனர்.

ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியான், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராம்போசா, எகிப்து அதிபர் அப்தெல் பத்தா அல் சிசி, இந்தோனேசிய அதிபர் பிரபுவோ சுபியாந்தோ, மலேசிய பிரதமர் அன்வார் இப்ராஹிம் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர். அமெரிக்காஈரான் போர் மற்றும் ஈரான்ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் கூட்டறிக்கையில் ஒருமித்த கருத்து ஏற்படுமா? என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது. மாநாட்டின் இறுதியில் உலக நாடுகள் உற்றுநோக்கும் ‘புது தில்லி பிரகடனம்’ வெளியிடப்பட உள்ளது.

## “சில்வர்ஸ்டோனில் அஜித் வேகம்... கொடியசைக்கிறார் முதல்வர் விஜய்?”

லண்டன், செப். 12–

நடிகரும் கார் பந்தய வீரருமான அஜித் குமார், லண்டனில் உள்ள புகழ்பெற்ற சில்வர்ஸ்டோன் சர்க்யூட்டில் நடைபெறும் 2026 மிச்செலின் லீ மான்ஸ் கப் தொடரின் 5–வது சுற்றில் பங்கேற்க தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். தனது சொந்த ரேசிங் அணி சார்பில் களமிறங்கும் அஜித், பிரான்ஸ் வீரர் ரொமைன் வோஸ்னியாக் உடன் இணைந்து காரை ஓட்டுகிறார். அவரது பயிற்சி வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதற்கிடையே தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக லண்டன் சென்றுள்ள தமிழக முதல்வர் விஜய், சில்வர்ஸ்டோன் பந்தயக் களத்தை பார்வையிட்டு, அஜித் பங்கேற்கும் கார் பந்தயத்தை இன்று மாலை கொடியசைத்து தொடங்கி வைக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.




இந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில், விஜய் முதல்வராகத் தேர்வானதில் மகிழ்ச்சி தெரிவித்துள்ள அஜித், மோட்டார் ஸ்போர்ட்ஸ் விளையாட்டை ஊக்குவிக்க முதல்வர் விஜய் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் பாராட்டியுள்ளார்.

## நேபாள பேரழிவு: 1,500 பேர் பலி; 5,600 பேர் மாயம் 85 தமிழர்களின் நிலை?

சென்னை, செப். 12–

நேபாளம்திபெத் எல்லைப் பகுதியில் உள்ள இமயமலைத் தொடரில் கடந்த மாதம் 26–ம் தேதி பனிப்பாறை திடீரென உடைந்து அருகிலிருந்த நதியில் விழுந்ததால் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவில் 1,500 பேர் உயிரிழந்ததாகவும், 5,600–க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் தகவல் தெரிவிக்கிறது.

இந்தப் பேரிடர் நிகழ்ந்து 17 நாட்கள் கடந்துள்ள நிலையில், நேபாளத்திற்கு ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட தமிழர்கள் பலரின் நிலை இன்னும் தெரியவில்லை. சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த நிறுவனம் மூலம் ஆன்மிகப் பயணம் சென்ற 49 பேரின் குடும்பத்தினர், காணாமல் போனவர்கள் குறித்து தமிழக அரசிடமிருந்து இதுவரை உறுதியான தகவல் கிடைக்கவில்லை என வேதனை தெரிவித்துள்ளனர். இதற்கிடையே நேபாளத்தில் நடைபெறும் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கு உதவும் வகையில், காணா மல் போன தமிழர்களை அடையாளம் காண டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக அவர்களது நெருங்கிய உறவினர்களிடமிருந்து சென்னை, தஞ்சாவூர் மற்றும் மதுரையில் உள்ள மூன்று ஆய்வகங்கள் மூலம் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

காணாமல் போனதாகக் கூறப்படும் மொத்தம் 85 தமிழர்களில், 78 பேரின் உறவினர்களுடைய டிஎன்ஏ விவரங்கள் நேபாள அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், காணாமல் போனவர்களில் நான்கு பேரின் நெருங்கிய உறவினர்கள் தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். அவர்கள் இன்னும் ஒரு வாரத்தில் தமிழகம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் வந்ததும் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன தமிழர்கள் குறித்த நல்ல செய்தி கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புடன் குடும்பத்தினர் கண்ணீருடன் காத்திருக்கின்றனர்.

## தலையங்கம்

மதுரை மணி
சனிக்கிழமை 12.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 26-ம் தேதி

# சிந்து சிறுமிகளின் கண்ணீர்: இந்தியா குரல் கொடுக்குமா?




கட்டாய மதமாற்றம், சிறார் திருமணம் குறித்த புகார்கள் மனித உரிமைக்காக அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டாமா?

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் சிறுபான்மை ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த சிறுமிகள் கடத்தப்பட்டு, கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டு திருமணம் செய்து வைக்கப்படுவதாக எழுந்துள்ள தொடர் புகார்கள் மிகுந்த கவலையை ஏற்படுத்துகின்றன.

டாண்டோ அல்லாயார் மாவட்டத்தைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடைய சீதா, ரூபி ஆகிய சகோதரிகள் கடத்தப்பட்டதாக அவர்களது குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். நீதிமன்றத்தில் ஆஜரானபோது அவர்கள் வீட்டுக்குச் செல்ல விரும்புவதாக அழுததாகவும், பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படாமல் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதற்கு அடுத்த நாளே 14 வயது பன்சி கோலி என்ற மற்றொரு சிறுமியும் கடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. செப்டம்பர் மாதத்தின் முதல் பத்து நாட்களில் ஆறு ஹிந்து சிறுமிகள் கடத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்பட்டதாக சிறுபான்மையினர் நல அமைப்புகள் குற்றம் சாட்டியிருப்பது இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

இங்கு முக்கியமானது மதம் மட்டுமல்ல; சிறுமிகளின் பாதுகாப்பு, அவர்களின் விருப்பம், பெற்றோரின் உரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள். எந்த நாட்டில், எந்த மதத்தைச் சேர்ந்த சிறுமிக்கு இத்தகைய அநீதி நேர்ந்தாலும் அதை எதிர்ப்பதே நாகரிக சமூகத்தின் கடமை.

இந்தியாவில் சிறுபான்மையினரின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுக்கும் அரசியல் கட்சிகளும் தலைவர்களும், அண்டை நாட்டில் சிறுபான்மை சமூகத்தினர் பாதிக்கப்படுவதாக எழும் புகார்களுக்கும் அதே மனிதநேய அளவுகோலில் குரல் கொடுக்க வேண்டும். மனித உரிமைக்கு மத எல்லையோ, அரசியல் எல்லையோ இருக்க முடியாது.

இந்திய அரசு இத்தகைய புகார்களை உரிய ராஜதந்திர வழிகளில் பாகிஸ்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சிறுமிகளின் பாதுகாப்பு, சுதந்திரமான வாக்குமூலம் மற்றும் சட்டப்பூர்வமான விசாரணை உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தலாம். சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இவ்விவகாரங்களை சுயாதீனமாகக் கண்காணிக்க வேண்டும்.

ஒரு சிறுமியின் கண்ணீரை அவளது மதத்தைப் பார்த்து மதிப்பிடக்கூடாது.

சிந்துவில் பாதிக்கப்படுவதாகக் கூறப்படும் சிறுமிகளுக்காக இந்திய அரசியல் குரல்கள் ஒன்றுபடுமா? அவர்களது பாதுகாப்பிற்காக இந்தியா ராஜதந்திர ரீதியில் வலியுறுத்துமா?

அதற்கான பதிலை மனிதநேயம் எதிர்பார்க்கிறது.

**– ஆசிரியர்**
**மதுரை மணி நாளிதழ்**


# விளை நிலங்களில் உயர்மின் கோபுர மின்பாதை அமைப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு!



கரூர், செப். 12–

பவர் கிரிட் நிறுவனம்திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நொச்சிபாளையத்தில் (நியூ புகலூர்) அமைந்துள்ள பவர்கிரிட் நிறுவனத்தின் துணை மின் நிலையம் முதல் துரம்பாடி கிராமம் பாரக்கடையில் அமைந்துள்ள அதானிக்கு சொந்தமான கரூர் டிரான்ஸ்மிஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் துணை மின் நிலையம் வரையும் அங்கிருந்து கரூர் மாவட்டம் பரமத்தியில் அமைந்துள்ள பவர்கிரிட் நிறுவனத்தின் துணை மின் நிலையம் வரையும் 400 கேவி உயர்மின் கோபுர மின்பாதை திட்டத்தை செயல்படுத்த திட்டமிடபட்டுள்ளது. இத்திட்டமானது திருப்பூர் கரூர் மாவட்ட பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் தங்களது காற்றாலை மற்றும் சூரிய மின்சார உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்காக அமைக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் லாபம் பெறுவதற்காக விவசாயிகளின் சாகுபடி நிலங்கள் முற்றிலும் அழியும்அபாயமும் நிலத்தின் இது தொடர்பாக கருர் அருகே உள்ள பெரிய திருமங்கலத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் பொதுச்செயலாளர் முத்து விஸ்வநாதன் அவர்கள் தலைமை வகித்தார் .மாவட்ட செயலாளர் ராஜா வரவேற்றார்.தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் நிறுவனர் ஈசன் முருகசாமி கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இதில் விளை நிலங்கள் வழியாக உயர்மின்கோபுர பாதை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தங்கள் கருத்துகளை பதிவு செய்தனர். .விசாய நிலங்கள் பாதிக்கப்படாத வகையில் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதில் சின்னசாமி மெய்ஞான மூர்த்தி உள்பட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்- த.வெ.க.வில் தேர்தல் பணிக்குழு அமைப்பு!



சென்னை, செப். 12–

இடைத்தேர்தல் வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்கிற புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழக வெற்றிக்கழகத் தலைவரும், முதலமைச்சருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அனைவருக்கும் வணக்கம்,

வருகின்ற அக்டோபர் 6–ந்தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்ள தேர்தல் பணிக்குழுவும், பணிகளைக் கண்காணிக்க தேர்தல் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள்:
1. அமைச்சர் N. ஆனந்த்
2. அமைச்சர் K.A. செங்கோட்டையன்
3. அமைச்சர் CTR நிர்மல் குமார்

தேர்தல் பணிக்குழு

35–மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி.

பொறுப்பாளர்: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

இணைப் பொறுப்பாளர்கள்:
1. அமைச்சர் ராஜ்குமார்
2. அமைச்சர் தென்னரசு
3. அமைச்சர் வினோத்

துணைப் பொறுப்பாளர்கள்:
1. சரவணமூர்த்தி MLA, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி
2. தியாகராஜன் MLA, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி
3. விஜயராஜ் MLA, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி
4. காமாட்சி MLA, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி
5.பாலாஜி (எ) மணிகண்டன் செங்கல்பட்டு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

101–தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி:

பொறுப்பாளர்: அமைச்சர் அருண்ராஜ்

இணைப் பொறுப்பாளர்கள்:
1. அமைச்சர் விஜய் பாலாஜி
2. அமைச்சர் விஜயலட்சுமி
3. அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன்

துணைப் பொறுப்பாளர்கள்:
1. பாலமுருகன் MLA, திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி
2. சத்தியபாமா MLA, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி
3.ராம்குமார் MLA, பல்லடம் சட்டமன்றத் தொகுதி
4. திலீப் MLA, நாமக்கல் சட்டமன்றத் தொகுதி
5. சத்யா MLA, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி

மேற்கண்ட குழுவினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல் பணிகளை மேற்கொள்வார்கள். தேர்தல் கண்காணிப்பாளர்கள், இரண்டு தொகுதிகளின் தேர்தல் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட கழகத் தோழர்கள் அனைவரும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். வெற்றிச் சின்னமாம் விசில் சின்னம், மீண்டும் வாகை சூட வேண்டும். இடைத்தேர்தல் வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர் என்கிற புதிய வரலாறு படைக்கும் வகையில் அனைவரும் தேர்தல் பணியாற்றிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொகுதிகளில் நம் வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளைத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக விரைவில் முன்னெடுப்போம் என்று தெரிவித்துள்ளார்.

# ப.சிதம்பரம்-சசிதரூர் இடையே கருத்து முரண்பாடு- காங்கிரஸ் கட்சியில் சலசலப்பு!



புதுடெல்லி, செப். 12–

இந்தியாவின் தலைமையில் 18–வது பிரிக்ஸ் உச்சிமாநாடு டெல்லியில் இன்றும் (சனிக்கிழமை), நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது. இதில் ரஷிய அதிபர் புதின், சீன அதிபர் ஜின்பிங் உள்ளிட்ட பிரிக்ஸ் அமைப்பின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.இந்த நிலையில் இந்த மாநாடு குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கருத்து தெரிவித்திருந்தார். இதுபற்றி அவர் கூறுகையில், "பிரிக்ஸ் மாநாட்டுக்கு எத்தனை அதிபர்கள் மற்றும் எத்தனை பிரதமர்கள் வருகிறார்கள்? என்று எனக்குத் தெரியாது.

ஆனால் கடந்த 3 பிரிக்ஸ் உச்சிமாநாடுகள் உறுதியான நன்மைகளையோ அல்லது தெளிவான முடிவுகளையோ ஏற்படுத்தியதாக நான் நினைக்கவில்லை. நாம் பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி20 மற்றும் குவாட் அமைப்புகளில் அங்கம் வகிக்கிறோம். அதனால் நமக்கு என்ன நன்மைகள் கிடைக்கின்றன? என்று எனக்குத் தெரியவில்லை. எந்த நன்மைகளையும் நான் காணவில்லை. ஆனால் முன்பு, சில பிரிக்ஸ் உச்சிமாநாடுகள் சில உறுதியான நன்மைகளை அளித்தன" என்றார். இவரது இந்த கருத்துக்கு பா.ஜனதா தலைவர்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தனர். இதற்கிடையே காங்கிரசின் மற்றொரு தலைவர் சசிதரூரின் கருத்தும், ப.சிதம்பரம் கருத்துக்கு எதிராக அமைந்துள்ளது.சசிதரூர் கூறுகையில், "பிரிக்ஸ் மாநாட்டில் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், அதிபர் மற்றும் பிரதமர் மட்டத்திலான சில பார்வையாளர்கள் உள்பட 12 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வது நமக்கு பெரிய கவுரவம் ஆகும். அது ஒரு குறிப்பிட்ட ராஜதந்திர ஒன்றிணைக்கும் ஆற்றலைக் காட்டுகிறது.

இது உலக அரங்கில் தனக்குத் தானே ஒரு மதிப்பைக் கொண்டுள்ளது" என்றார்.மேலும், "11 பிரிக்ஸ் நாடுகளின் குழுவானது. உலகின் பெரும்பான்மையான மக்கள்தொகையையும், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 41 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது" என்று பிரிக்சின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அத்துடன், இந்த கூட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் பேசினார். குறிப்பாக அமெரிக்காவின் 100 சதவீத வரி பற்றியும் பேசினார். நாடுகளிடையே அழுத்தமான உலகளாவிய பிரச்சினைகள் குறித்து ஒருமித்த கருத்தை எட்டுவதில் உள்ள சிரமத்தையும் சுட்டிக்காட்டினார்.

# 37 ஆண்டுகளுக்குப் பிறகு! மாணவர் சங்கத் தேர்தல்கள் நடத்த கர்நாடக அரசு உத்தரவு!



கர்நாடகா, செப். 12–

கர்நாடகத்தின் அனைத்து கல்வி நிலையங்களிலும் மாணவர் சங்கத் தேர்தல்களை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

கர்நாடகத்தின் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென மாநில அரசு கடந்த வியாழக்கிழமை (செப். 10) உத்தரவிட்டு ள்ளது. இந்த நிலையில், முதற்கட்டமாக கர்நாடக அரசின் உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு, அரசு உதவிப் பெறும் மற்றும் தனியார் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர் சங்கத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு கல்வி நிலைய ங்களின் மாணவர் சங்கங்களிலும் ஒரு தலைவர், 2 துணைத் தலைவர்கள் , 2 பொதுச் செயலர்கள் மற்றும் 2 கூடுதல் செயலர்கள் என மொத்தம் 6 பேர் கொண்ட குழுவினர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். ஆண் – பெண் என இருபாலர் பயிலும் கல்வி நிலையங்களில் துணைத் தலைவர் மற்றும் கூடுதல் செயலர் பதவிகளில் பெண்களுக்குத் தலா ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது.

இத்துடன், கல்வியாண்டுத் துவங்கிய முதல் 5 வாரங்களுக்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமெனவும், பிரசாரங்களுக்கு போஸ்டர்கள் மற்றும் பேனர்கள் ஆகியவைப் பயன்படுத்தக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட விரும்பும் மாணவர்கள் முந்தைய கல்வியாண்டில் குறைந்தபட்சம் 75% வருகையைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் எந்தவொரு குற்றவியல் பதிவும் அவர்கள் மீது இருக்கக் கூடாது எனும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, கர்நாடகத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் வீரேந்திர பாட்டீல் தலைமையிலான அரசு கல்வி நிலையங்களில் நடத்தப்படும் மாணவர் சங்கத் தேர்தல்களுக்குத் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

# மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: சென்னை சென்ட்ரல் - மதுரை இடையே சிறப்பு ரெயில் இயக்கம்!



மதுரை, செப். 12–

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, சென்னையில் இருந்து மதுரைக்கு சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகிறது.


தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

* சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 16–ந்தேதி (புதன்கிழமை) மாலை 4.10 மணிக்கு புறப்பட்டு செல்லும் சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.06153), மறுநாள் காலை 4.30 மணிக்கு மதுரை சென்றடையும். மறுமார்க்கமாக, மதுரையில் இருந்து வருகிற 17–ந்தேதி (வியாழக்கிழமை) மாலை 3.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06154), மறுநாள் காலை 3.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு வந்தடையும். அதேபோல, தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 16–ந்தேதி இரவு 9.40 மணிக்கு புறப்பட்டு செல்லும் சிறப்பு ரெயில் (06157), மறுநாள் காலை 5 மணிக்கு மதுரை சென்றடையும். மறுமார்க்கமாக, மதுரையில் இருந்து வருகிற 17–ந்தேதி இரவு 7 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06158), மறுநாள் காலை 3.20 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

சென்னை கடற்கரை ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 16–ந்தேதி காலை 10.45 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (06161), இரவு 11.30 மணிக்கு மானாமதுரை சென்றடையும்.

மறுமார்க்கமாக, மானாமதுரையில் இருந்து வருகிற 17–ந்தேதி மதியம் 12 மணிக்கு புறப்படும் பயணிகள் ரெயில் (06162), இரவு 11.45 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# புரட்டாசி மாத ராசிபலன் 2026: இந்த 6 ராசிகள் உஷார்!



செப்டம்பர் 17–ஆம் தேதி சூரிய பகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னி ராசிக்கு பெயர்ச்சி அடைகிறார். புரட்டாசி மாதத்தில் நடைபெறும் இந்த சூரியப் பெயர்ச்சி சில ராசியினருக்கு நிதி, வேலை, குடும்பம் மற்றும் உடல்நலம் சார்ந்த சவால்களை ஏற்படுத்தலாம் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

**மிதுனம்:** மனக்கவலை, வேலை அழுத்தம் ஏற்படலாம். முதலீடுகளில் நிதானம் தேவை.

**கடகம்:** குடும்பச் செலவுகள் அதிகரிக்கலாம். நிதித் திட்டமிடலும் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் அவசியம்.

**சிம்மம்:** சேமிப்பு மற்றும் குடும்பப் பொறுப்புகளில் கூடுதல் கவனம் தேவை. தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**துலாம்:** உடல்நலம் சார்ந்த செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடன் கொடுத்தல், அவசர முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** கூட்டுத் தொழில் மற்றும் பணியிடத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். நிதி முடிவுகளில் எச்சரிக்கை அவசியம்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை, குடும்பத்தினர் மற்றும் தொழில் கூட்டாளிகளுடன் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

புரட்டாசியில் இந்த 6 ராசியினரும் செலவு, முதலீடு, உடல்நலம் மற்றும் உறவுகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

# உதவியாளர் வீட்டில் பணம், நகைகளை கைப்பற்றிய ED: கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும் விலகிய காங்கிரஸ் தலைவர்!



உத்தரகாண்ட் மாநிலத்தின் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஹரிஷ் ராவத். இவர் ஏற்கனவே உத்தரகாண்ட் மாநில முதல்வராக இருந்துள்ளார். இவரின் 2014 முதல் 2017–ம் ஆண்டு வரையிலான முதல்வர் பதவி காலத்தில், சிறப்புப்பணி அதிகாரியாக செயல்பட்டவர் சந்தன் சிங் ஜீனா. தற்போது தனிப்பட்ட உதவியாளராக (PA) உள்ளார். இவரது வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அப்போது 32 லட்சம் ரூபாய் பணம் மற்று 12–க்கும் மேற்பட்ட விலையுயர்ந்த கடிகாரங்களை அதிகாரிகள் கைப்பற்றினார். உதவியாளர் வீட்டில் இருந்து பணம் மற்றும் நகை கைப்பற்றப்பட்ட நிலையில், ஹாரிஷ் ராவத், காங்கிரஸ் கட்சியில் தனது அனைத்து பதவிகளிலும் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.




கருர் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த விழாவில் 266 பயனாளிகளுக்கு 1.46 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பால் வளத்துறை அமைச்சர் விஜயலட்சுமி வழங்கினார்.அருகில் மாவட்ட ஆட்சியர் முத்துக்குமரன் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் சத்யா உள்ளார்.

## சினிமா துளிகள்..!

# லண்டனுக்கு சென்றேனா? வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த கீர்த்தி சுரேஷ்!



தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிப்படங்களில் நடித்து பிரபலமான நடிகையாக இருப்பவர் கீர்த்தி சுரேஷ். இவரது நடிப்பில் டோரோதி உள்ளிட்ட படங்கள் வரவிருக்கின்றன. சினிமா பணிகளுக்காக பிசியாக சுற்றிக்கொண்டு இருக்கும் கீர்த்தி சுரேஷ் கடந்த இரு தினங்களுக்கு முன்பாக லண்டன் புறப்பட்டு சென்றதாக சமூக வலைத்தளங்களில் வதந்தி பரவின. விமான நிலையம் ஒன்றில் கைப்பையுடன் கீர்த்தி சுரேஷ் இருக்கும் போட்டோவும் பரவின. லண்டனில் தொழில் முதலீடுகளை ஈர்க்க முதல் அமைச்சர் விஜய் சென்றுள்ளார். அங்கு நடைபெறும் அஜித்குமார் கார் பந்தயத்தையும் தொடங்கி வைக்க உள்ள நிலையில், இந்த நிகழ்ச்சியை காண திரைப்பிரலங்கள் சிலர் லண்டனில் முகமிட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில்தான், கீர்த்தி சுரேஷும் லண்டன் சென்றதாக தகவல் பரவியது. இது குறித்த வதந்திகளுக்கு தற்போது கீர்த்தி சுரேஷ் தனது சமூக வலைத்தள பதிவில் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். கனடாவில் நடைபெறும் டொராண்டோ திரைப்பட விழாவில் 'டோரதி' திரைப்படத்தின் திரையிடலுக்காக சென்ற நடிகை கீர்த்தி சுரேஷ், "ஆமா கரெக்ட்.. லண்டனில் தானே டொராண்டோ பிலிம் பெஸ்டிவல் நடக்குது!" என நக்கலாக கமெண்ட் செய்து முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஆன்லைன் மூச்சுப் பயிற்சி ஆபத்தா? எச்சரிக்கை!



சமூக வலைதளங்களில் வைரலாகும் நீண்ட நேரம் மூச்சை அடக்கும் பயிற்சி நுரையீரலை பலப்படுத்தாது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். அதிக நேரம் மூச்சை அடக்குவதால் உடலில் கார்பன் டை ஆக்சைடு அதிகரித்து, மயக்கம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படலாம்.

குறிப்பாக இதய நோய், ரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு போன்ற பிரச்னை உள்ளவர்கள் இதுபோன்ற பயிற்சிகளைத் தவிர்க்க வேண்டும். நுரையீரல் செயல்பாட்டை அறிய ஸ்பைரோமெட்ரி உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனைகளே நம்பகமானவை.

நுரையீரல் ஆரோக்கியத்திற்கு நடைபயிற்சி, நீச்சல், சைக்கிளிங், முறையான மூச்சுப் பயிற்சி, சத்தான உணவு மற்றும் புகைப்பழக்கத்தைத் தவிர்த்தல் சிறந்தது என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.



தேனி மாவட்டம் தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாடு அரசின் புதிய திட்டமானதாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி கழக மேலான்மை இயக்குனர் கோவிந்தராவ் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன், பெரியகுளம் சார்ஆட்சியர் தேவ்லேந்து மற்றும் ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் துஷார் ஸ்ரீஹர்ஷின்டே ஆகியோர் உள்ளனர்.

### ராசிபுரம் ரோட்டரி சங்கம் சார்பில்

## மாநில அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா!



நாமக்கல், செப். 12–

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 8 பள்ளி ஆசிரியர்கள், 3 அரசு கல்லூரி முதல்வர்கள், 8 தனியார் பள்ளி ஆசிரியர்கள் என மொத்தம் 38 பேருக்கு, "தேசிய கட்டமைப்பாளர்கள்" விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

ஆளுநர் கே.எஸ்.கருணாகர பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், முன்னாள் உதவி ஆளுநர்கள் டாக்டர் எம்.ராமகிருஷ்ணன், எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் மு.செல்வம், ரோட்டரி மாவட்ட கல்விக் குழு தலைவர் எம்.அய்யப்பராஜ், முன்னாள் மாவட்ட கல்வி அலுவலர் எம்.ஏ.உதயகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று விருதுகளை வழங்கினர். செந்தமங்கலம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் ஆர்.சிவக்குமார், பாப்பிரெட்டிப்பட்டி அரசு கல்லூரி முதல்வர் பி.மைதிலி ஆகியோர் உரையாற்றினர். ரோட்டரி சங்க செயலாளர் நமசிவாயம், முன்னாள் தலைவர் இ.ஆர்.சுரேந்திரன், டி.பி.வெங்கடாசலபதி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



தேனிமாவட்டம்கொடுவிலார்பட்டி அரசுமேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கம் தொடர்பான முன்னோட்ட பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி கழக மேம்பாட்டு இயக்குனர் கோவிந்தராவ் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் பெரியகுளம் சார்–ஆட்சியர் தேவ்லேந்து மகளிர் திட்ட இயக்குனர் வீராச்சாமி ஆகியோர் உள்ளனர்.

## முதல் அமைச்சர் விஜய் பேச்சை கண்டித்து திமுக கண்டன ஆர்ப்பாட்டம்!



சென்னை, செப். 12–

தமிழக முதல் அமைச்சர் விஜய்யின் சட்டப்பேரவை பேச்சை கண்டித்து திமுக ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. காலை 10.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும். இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "திரையுலக மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து, குழந்தைகளை ஏமாற்றி குடும்பத்துக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி , போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி, அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் திமுக கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று, அதிமுக சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, முதல்வராகி இருக்கிறார் நடிகர் விஜய். இப்பொறுப்புக்கு வந்த பிறகு பொறுப்பை உணர்ந்து செயல்பட்டாரா? என்றால் இல்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஒரு சில வாக்குறுதிகளை அரைகுறையாகச் செய்து ஏமாற்றி வருகிறார். திமுக ஆட்சியில் மு.க.ஸ்டாலினால் கொண்டு வரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.கொலை – கொள்ளை அதிகமாகிவிட்டது. போதைப் பொருள் நடமாட்டமும் – பாலியல் வன்முறையும் அதிகமாகிவிட்டது. பல்வேறு குற்றச்செயல்களில் தவெக நிர்வாகிகளே சிக்கி வருகிறார்கள். அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள். 'தெரியாமல் ஓட்டுப் போட்டுவிட்டோம்' என்று மக்கள் வருந்திச் சொல்லி வருகிறார்கள். இதில் இருந்து திசை திருப்புவதற்காக தனது டயலாக் சூட்டிங் மேடையாக தமிழ்நாடு சட்டப்பேரவையை முதல்வர் மாற்றி விட்டார்.

திமுகவையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட முதல்வர் கருணாநிதியையும், இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறனையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசரநிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த மு.க.ஸ்டாலினின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது. அரசியல் உலகில் இத்தகைய அருவெறுப்பான உரையை சட்டமன்றம் கண்டிருக்காது.

அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு, மரபு, வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கிறது. படங்களாக அந்த அவையில் நிற்கிறவர்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்திருப்பார்கள். சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் தான் பேசுவது தவறு என்று தெரிந்தே பேசி, 'மீம்ஸ்', 'ரீல்ஸ்'–ஐ வெளியிடுகிறார்கள். நேரலை மூலமாக மக்களை சென்றடைந்த பிறகு அதை ஒப்புக்கு அவைக்குறிப்பில் இருந்து நீக்கிக் கொள்கிறார்கள். இப்படியாக தந்திர மேடையாக சட்டப்பேரவையை தவெக அரசு பயன்படுத்துகிறது.ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதல்வர் விஜய் மாறியிருக்கிறார். இவரது இப்பேச்சைக் கண்டிக்கும் வகையில், திமுக சார்பில் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் 12.09.2026 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில – மாவட்ட நிர்வாகிகள் – ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் – நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், திமுக தொண்டர்கள் கலந்து கொண்டு முதல்வரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டிகை காலங்களில் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் தொடரும் சிக்கல்!




சென்னை, செப். 12–

பண்டிகை காலங்களில் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் தொடரும் சிக்கல்களால், டிக்கெட் முன்பதிவு செய்ய முடியாமல் பயணிகள் அவதியடைந்து வருகின்றனர்.

விநாயகர் சதுர்த்தி மற்றும் தீபாவளி போன்ற தொடர் பண்டிகை விடுமுறை நாட்களை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்குச் செல்ல திட்டமிட்டுள்ள பொதுமக்களின் வசதிக்காக இந்திய ரெயில்வே சார்பில் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், நேற்று காலை தட்கல் முறையில் டிக்கெட் முன்பதிவு செய்ய ஏராளமான பொதுமக்கள் ஒரே நேரத்தில் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் குவிந்தனர். குறிப்பாக, ஏ.சி. அல்லாத சாதாரண வகுப்புகளுக்கான தட்கல் முன்பதிவு காலை 11 மணி அளவில் தொடங்கியதும், ஆயிரக்கணக்கான பயணிகள் ஒரே நேரத்தில் இணையதளத்தைப் பயன்படுத்த முயன்றனர்.

இதனால் ஏற்பட்ட கடும் சர்வர் பிரச்சினை காரணமாக காலை 11 மணி முதல் 11.20 மணி வரை இணையதளத்தை பயன்படுத்த முடியவில்லை. பெரும்பாலான பயணிகளுக்கு "அதிகப்படியான நெரிசல் காரண மாக கோரிக்கையைச் செயல்படுத்த முடியவில்லை" என்ற செய்தி மட்டுமே திரையில் தோன்றியது. இதனால், 20 நிமிடங்களுக்கும் மேலாக பயணிகள் தங்களின் விபரங்களை உள்ளிடவோ, கட்டணம் செலுத்தவோ முடியாமல் தவித்தனர்.

இணையதளத்தில் ஏற்பட்ட சிக்கல் சரியாகி மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குள், பெரும்பாலான ரெயில்களில் தட்கல் டிக்கெட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து, காத்திருப்போர் பட்டியலுக்குச் சென்றன. இதனால், நீண்ட நேரம் முன்பாகக் காத்திருந்த ஆயிரக்கணக்கான ரெயில் பயணிகள் கடும் ஏமாற்றமடைந்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் பண்டிகை மற்றும் வார இறுதி விடுமுறை நாட்களின்போது, இந்த தட்கல் டிக்கெட்டில் இணையதளச் சிக்கல் என்பது தொடர்கதையாகி வருவதாகப் பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுபோன்ற பண்டிகை காலங்களில் சர்வர் முடக்கத்தைத் தவிர்க்க, சர்வர் திறனை மேம்படுத்தி தடையற்ற டிக்கெட் முன்பதிவு வழங்க ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரெயில் பயணிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சாலமன் பாப்பையா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு!



சென்னை, செப். 12–

சாலமன் பாப்பையா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டிமன்ற நடுவரும் தமிழறிஞருமான சாலமன் பாப்பையா வயது மூப்பு காரணமாக நேற்று காலமானார். அவருக்கு வயது 90. மதுரையை சேர்ந்த சாலமன் பாப்பையா பட்டிமன்ற நிகழ்ச்சிகள் மூலம் தமிழக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த்துறை பேராசிரியராக பணியாற்றிய இவர், தமிழ் இலக்கியங்கள் குறித்து ஆற்றிய உரைகளாலும் பிரபலமானவர். திருக்குறள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதியுள்ளார்.

சாலமன் பாப்பையா மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து வருகிறார்கள். தமிழக அரசு சார்பில் அமைச்சர் நிர்மல் குமார் உள்ளிட்டோர் சாலமன் பாப்பையாவின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அப்போது சாலமன் பாப்பையாவின் உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடத்தப்படுமா? என அமைச்சர் நிர்மல் குமாரிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அரசு மரியாதை வழங்குவது குறித்து ஆலோசித்து விரைவில் முடிவு வெளியிடப்படும் என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில், சாலமன் பாப்பையா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் நிர்மல்குமார் தனது எக்ஸ் தளத்தில் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

## ஜான்சன் ஹெல்த்தில் பிஃயூஜி பிலிம் எக்லான் ஸ்மார்ட் எம்.ஆர்.ஐ. அறிமுகம்!




ஜான்சன் ஹெல்த் மருத்துவமனையில் பிஃயூஜி பிலிம் எக்லான் ஸ்மார்ட் எம்ஆர்ஐ ஸ்கேன் அறிமுகம். இதன் மூலம் ஈரோட்டை சுற்றியுள்ள மாவட்ட மக்கள் மேம்படுத்தப்பட்ட எம்ஆர்ஐசேவைகளை பெறுவதற்காக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ டெக்னாலஜியில் உயர்தர இமேஜிங், நோயாளியின் நோயறிதல், மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் அடங்கிய பணிப்பாய்வுகளை ஒருங்கிணைக்கிறது.

மருத்துவ உலகில் தற்போதைய இமேஜிங் திறன்களுக்கு பிஃயூஜி ஸ்மார்ட் பிலிம் எம் ஆர் ஐ ஸ்கேன் கதிர்வீச்சு இல்லாதது இதன் சிறப்பம்சமாகும். அதேநேரத்தில் ஜான்சன் குழுமங்களின் நிர்வாக இயக்குநர் டி. என். திருக்குமார். விரைவாகவும் அதிக நோயாளிகளுக்கு ஸ்கேன் பரிசோதனை வழங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

## CSK-க்கு புதிய கோச் இயான் மோர்கன்?




சென்னை, செப். 12–

2027 ஐபிஎல் தொடரில் வலுவான கம்பேக் கொடுக்கத் தயாராகும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, புதிய தலைமைப் பயிற்சியாளராக இங்கிலாந்து முன்னாள் கேப்டன் இயான் மோர்கனை நியமிக்க பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மோர்கன் ஆண்டுக்கு ரூ.20 கோடி சம்பளம் கேட்டதாகவும், சிஎஸ்கே நிர்வாகம் ரூ.15 கோடி வரை வழங்க தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது. மோர்கன் நியமனம் உறுதியான பின்னர் 2027 சீசனுக்கான புதிய கேப்டன் குறித்த அறிவிப்பும் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வேலை வாய்ப்பு
## TNPSC–ல் 170 வேலைகள்!



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), Combined Technical Services Examination (Interview Posts)மூலம் 170 காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

வேலைவாய்ப்பு: தமிழ்நாடு அரசு நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்: 170
விண்ணப்ப முறை: ஆன்லைன்
விண்ணப்பம் தொடக்கம்: 07.09.2026
கடைசி நாள்: 06.10.2026 இரவு 11.59 மணி
அதிகாரப்பூர்வ இணையதளம்: TNPSC tnpsc.gov.in
தகுதியானவர்கள் TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.




பழனியில் தமிழக வெற்றி கழகம் சார்பில், இமானுவேல் சேகரன் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன், நகரச் செயலாளர் மிதுன் மனோகரன், ஜே பி எஸ் சஞ்சய் ஆகியோர் உள்ளனர்.

## இராசிபுரம் பகுதிகளில் ஆம்புலன்ஸ் உட்பட 9 வாகனங்கள் சிறைபிடிப்பு!



ராசிபுரம், செப். 12–

மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் இராசிபுரம் பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு M.பதுவைநாதன் அவர்கள் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு A.செல்வகுமார் அவர்கள் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, ஆயில்பட்டி போன்ற பகுதிகளில் சிறப்பு வாகன தணிக்கை மேற்கொண்டார்.

இதில் ஆயில்பட்டி பகுதியில் தகுதி சான்று புதுப்பிக்கப்படாத ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் மூன்று டாட்டா ஏஸ் வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டு ஆயில்பட்டி காவல் நிலைய வளாகத்தினுள் மேல் நடவடிக்கைக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று தகுதிச் சான்று புதுப்பிக்கப்படாத ஒரு டாட்டா ஏஸ் வாகனம் சிறைபிடிக்கப்பட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலக வளாகத்திலும், மற்றும் வெண்ணந்தூர் பகுதிகளில் தகுதிச் சான்று புதுப்பிக்கப்படாத நான்கு டாட்டா ஏஸ் வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டு வெண்ணந்தூர் காவல் நிலையத்தில் மேல் நடவடிக்கைக்காக நிறுத்தப்பட்டுள்ளது .

இச்சிறப்பு வாகன தணிக்கையின் மூலமாக அரசுக்கு இணக்க கட்டணமாக சுமார் 2.20 லட்சம் ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . மேலும் அவ் வாகன ஓட்டுனர்களுக்கு தகுதி சான்று புதுப்பிக்கப்படாமல் பொதுச்சாலையில் வாகனங்களை இயக்க கூடாது என கடுமையாக எச்சரிக்கப்பட்டது . இவ்வாகன தணிக்கை இனிவரும் காலங்களில் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, ஆயில் பட்டி மற்றும் மங்களபுரம் போன்ற பகுதிகளில் அடிக்கடி நடைபெறும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு M.பதுவைநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார் .




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## “அங்கே மதமாற்றம்... இங்கே மௌனம் ஏன்?”




## சென்னையின் 60 ஆண்டு அடையாளம் ‘விவேக்ஸ்’ கடைகள் மூடல்!

சென்னை, செப். 12–

தமிழகத்தின் பிரபல வீட்டு உபயோக மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனை நிறுவனமான விவேக்ஸ் (Viveks), தனது அனைத்து சில்லறை விற்பனை மற்றும் இ–காமர்ஸ் செயல்பாடுகளையும் நிறுத்த முடிவு செய்துள்ளது.



1965–ல் சென்னை மயிலாப்பூரில் தொடங்கப்பட்ட விவேக்ஸ், பின்னர் புரசைவாக்கம், தி.நகர் உள்ளிட்ட பகுதிகளில் விரிவடைந்து, சுமார் 60 ஆண்டுகளாக தமிழக மக்களின் நம்பிக்கைக்குரிய விற்பனை நிறுவனமாக திகழ்ந்தது. புத்தாண்டு சிறப்பு தள்ளுபடி, குறைந்த முன்பணம் மற்றும் மாதத் தவணை விற்பனை போன்ற முறைகளை பிரபலப்படுத்திய நிறுவனங்களில் விவேக்ஸ் முக்கியமானது.

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு கடைகளை மூடும் முடிவு எடுக்கப்பட்டதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஊழியர்களுக்கான முழுச் சம்பளம் வழங்கப்பட்டதுடன், வாடிக்கையாளர்களின் ஆர்டர்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, இது நிரந்தர முடிவல்ல; தற்காலிக நிறுத்தமாக இருக்கலாம், விவேக்ஸ் மீண்டும் வர்த்தகத்தில் களமிறங்க வாய்ப்புள்ளது என்றும் நிறுவனக் குடும்பத்துடன் தொடர்புடையவர்கள் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

## “திருப்பரங்குன்றம் மலை அளவீட்டில் அறநிலையத்துறை ஏன்? ஐகோர்ட் அதிரடி!”

மதுரை, செப். 12–

திருப்பரங்குன்றம் மலையை அளவீடு செய்யும் விவகாரத்தில், அறநிலையத்துறையின் பங்கு என்ன? என உயர்நீதிமன்ற மதுரை கிளை கேள்வி எழுப்பியுள்ளது.




முன்னதாக, மத்திய தொல்லியல்துறையுடன் இணைந்து வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் மலையை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவுக்கு எதிராக அறநிலையத்துறை உச்சநீதி மன்றத்தை அணுகிய நிலையில், உயர்நீ திமன்றத்தில் இடையீட்டு மனு தாக்கல் செய்யலாம் என உத்தரவிடப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி அமர்வு, “கோவில் சொத்துகளை பாதுகாக்கவே உத்தரவிட்டோம்.

இது கோவில், தர்கா, தொல்லியல்துறை தொடர்பான விவகாரம்; இதில் அறநிலையத்துறைக்கு என்ன வேலை?” என கேள்வி எழுப்பினர்.

அறநிலையத்துறைக்கு இடையீட்டு மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி, வழக்கை செப்டம்பர் 25–க்குஒத்திவைத்தனர்.

## பாகிஸ்தானில் ஹிந்து சிறுமிகள் கடத்தல்: 10 நாட்களில் 6 பேர் மதமாற்றம்!

இஸ்லாமாபாத், செப். 12–

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஹிந்து சிறுமிகள் கடத்தப்பட்டு, கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு திருமணம் செய்து வைக்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் எழுகின்றன.

டாண்டோ அல்லாயார் மாவட்டத்தில் 13 மற்றும் 14 வயதுடைய சீதா, ரூபி என்ற இரு சகோதரிகள் கடத்தப்பட்டதாக குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். நீதிமன்றத்தில் ஆஜரான சிறுமிகள், “வீட்டுக்குச் செல்ல வேண்டும்” என அழுதபோதும், அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படாமல் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பப்பட்டனர்.

இதற்கடுத்த நாளே 14 வயது பன்சி கோலி என்ற மற்றொரு ஹிந்து சிறுமி கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதத்தின் முதல் 10 நாட்களிலேயே 6 ஹிந்து சிறுமிகள் கடத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்பட்டதாகசிறுபான்மையினர் நல அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

## எஸ்.பி.ஐ. ஏ.டி.எம் விதிகள் மாறுகிறது: அக்.1 முதல்?

சென்னை, செப். 12–

எஸ்.பி.ஐ. சம்பளக் கணக்கு வாடிக்கையாளர்கள் பிற வங்கி ஏ.டி.எம்களில் மேற்கொள்ளும் இலவச பரிவர்த்தனைகள் மாதம் 10–லிருந்து 5 ஆக அக்டோபர் 1 முதல் குறைக்கப்படுகின்றன. இலவச வரம்பைத் தாண்டினால் பணப் பரிவர்த்தனைக்கு ரூ.23 + ஜி.எஸ்.டி, பணமில்லா சேவைகளுக்கு ரூ.11 + ஜி.எஸ்.டி வசூலிக்கப்படும்.

அடிப்படை சேமிப்புக் கணக்குதாரர்களுக்கு மாதம் 4 முறை பணம் எடுக்கும் பரிவர்த்தனைகள் மட்டுமே இலவசம்; அதற்கு மேல் ஒவ்வொரு முறையும் ரூ.15 + ஜி.எஸ்.டி கட்டணம் விதிக்கப்படும். அதேநேரம் UPI, IMPS, NEFT, RTGS டிஜிட்டல் பரிவர்த்தனைகள் தொடர்ந்து கட்டணமின்றி இருக்கும்.

## செப்.18 வானில் பேரொளி! விண்மீன்களை மிஞ்சும் சுக்கிரன்!

சூரிய குடும்பத்தின் இரண்டாவது கிரகமான சுக்கிரன் (Venus), வரும் செப்டம்பர் 18 அன்று தனது உச்சகட்ட பிரகாசத்தை அடைய உள்ளதாக நாசா (NASA) அறிவித்துள்ளது. மாலை நேரச் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு, மேற்குத் திசை வானில் தோன்றும் இந்த அரிய வான்நிகழ்வை மக்கள் அனைவரும் வெறும் கண்ணால் கண்டு ரசிக்கலாம்.



வானியல் ஆர்வலர்களுக்கு இந்த செப்டம்பர் மாதம் ஒரு மறக்க முடியாத விருந்தாக அமையப் போகிறது. செப்டம்பர் 18 அன்று மாலை சூரியன் மறைந்த சிறிது நேரத்திலேயே, மேற்குத் திசை அடிவானத்திற்குச் சற்று மேலே சுக்கிர கிரகம் வழக்கத்திற்கு மாறான பேரொளியுடன் ஜொலிக்கும்.

சூரியனுக்கு மிக அருகில் இருப்பதாலும், அதன் அடர்ந்த மேகக்கூட்டங்கள் சூரிய ஒளியைப் பெருமளவில் பிரதிபலிப்பதாலும், பூமியிலிருந்து பார்க்கும்போது சுக்கிரன் மிக பிரகாசமாகத் தெரியும். அன்றைய தினம் நட்சத்திரங்களை விடவும் பல மடங்கு அதிக வெளிச்சத்துடன் இது ஒரு வைரக் கல் போலக் காட்சியளிக்கும்.

எப்போது, எப்படிப் பார்க்கலாம்?

நேரம்: செப்டம்பர் 18, மாலை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு.

திசை: மேற்கு அடிவானம் (Western Horizon).

பார்க்கும் முறை: இதைப் பார்க்கத் தொலைநோக்கி (Telescope) அல்லது எந்தவிதச் சிறப்பு உபகரணங்களும் தேவையில்லை. வெறும் கண்ணாலேயே தெளிவாகப் பார்க்கலாம்.

முக்கியக் குறிப்பு: கட்டிடங்களோ, மரங்களோ மறைக்காதவாறு திறந்தவெளியான இடத்திலிருந்து பார்த்தால் இந்த அழகிய காட்சியைக் தெளிவாக ரசிக்க முடியும்.

செப்டம்பரில் காத்திருக்கும் பிற வான்நிகழ்வுகள்:

சுக்கிரனின் இந்த ஒளிவெள்ளம் மட்டுமின்றி, இந்த மாதத்தில் இன்னும் பல வான்நிகழ்வுகளும் அணிவகுத்து நிற்கின்றன:

செப்டம்பர் 14 – 20: சந்திரன் இரவு வானைக் கடந்து, விருச்சிக (Scorpius) ராசியின் இதயப் பகுதியான ‘அண்டாரெஸ்’ (Antares) என்ற சிவந்த நட்சத்திரத்திற்கு அருகில் பயணிக்கும்.

செப்டம்பர் 19: ‘சர்வதேச சந்திர பார்வையிடும் இரவு’ (International Observe the Moon Night) கடைப்பிடிக்கப்படுகிறது.

செப்டம்பர் 22: இலையுதிர்கால சமபகல்–சமஇரவு நாள் (September Equinox).

செப்டம்பர் 26: ‘அறுவடை நிலவு’ (Harvest Moon) சனிக்கிரகத்திற்கு அருகே உதிக்கும்.

செப்டம்பர் 18 மாலை, சூரியன் மறைந்ததும் மேற்கு அடிவானத்தை நோக்கத் தவறாதீர்கள்; வானில் ஒளிரும் அந்த விண்மீன் போன்ற பேரொளி ஒரு நட்சத்திரமல்ல, அது நம் அண்டை கிரகமான சுக்கிரன்.

# 17 ஆண்டுகளுக்குப் பின் மகா கும்பாபிஷேகம்! குப்பையில்லா மதுரையாக மாறுமா தூங்கா நகரம்?

## உலகமே திரும்பிப் பார்க்கும் தருணத்தில் மதுரைக்கு ஒரு தூய்மைத் தேர்வு!

மதுரை, செப். 12–

“தூங்கா நகரம்”, “கோயில் நகரம்”, “தமிழின் தொன்மை நகரம்” என்று பெருமையுடன் அழைக்கப்படும் மதுரை, இன்னும் சில நாள்களில் உலகம் உற்றுநோக்கும் ஒரு மகத்தான ஆன்மிக நிகழ்வை எதிர்கொள்ள இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு செப்டம்பர் 17–ஆம் தேதி நடைபெறுகிறது. கடைசியாக 2009 ஏப்ரல் 8–ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.




ஆனால், இந்த ஆன்மிகப் பெருவிழா மதுரைக்கு இன்னொரு முக்கியமான கேள்வியையும் முன்வைக்கிறது. “கோயிலைப் புதுப்பித்துவிட்டோம்; கோயில் நகரத்தையும் புதுப்பித்து விட்டோமா?” என்பதே அந்தக் கேள்வி.

கும்பாபிஷேகத்திற்காக சுமார் 7 லட்சம் பக்தர்கள் மதுரைக்கு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தங்கும் விடுதிகள், போக்குவரத்து, பாதுகாப்பு, பக்தர்கள் நிகழ்ச்சியைக் காணும் வசதிகள் உள்ளிட்ட ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தனை லட்சம் பேர் ஒரே நகரை நோக்கி வரும்போது அவர்கள் எடுத்துச் செல்லப்போவது மீனாட்சியம்மனின் தரிசன நினைவு மட்டுமல்ல; மதுரை நகரத்தைப் பற்றிய ஒரு மதிப்பீடும் கூட.

### கோபுரம் மட்டும் மதுரையின் முகமல்ல!

மீனாட்சி அம்மன் கோயிலின் கம்பீரமான கோபுரங்களையும், ஆயிரங்கால் மண்டபத்தின் கலைநயத்தையும், மதுரையின் பாரம்பரியத்தையும் உலகம் அறிவது புதிதல்ல. ஆனால் சுற்றுலாப் பயணி ரயில் நிலையத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும் சாலை, தெருக்களின் தூய்மை, குப்பைத் தொட்டிகளின் நிலை, கழிப்பறை வசதி, சாக்கடை, நடைபாதை, போக்குவரத்து ஒழுங்கு ஆகியவற்றையும் பார்க்கிறார்.

ஒரு நகரத்தின் பெருமை அதன் நினைவுச் சின்னங்களால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை; அந்த நினைவுச் சின்னங்களைச் சுற்றியுள்ள வாழ்க்கையின் தரத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது.

மதுரையின் சுற்றுச்சூழல் நிலை குறித்து சமீபத்திய தரவுகளும் கவலை அளிக்கின்றன. 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 48 நகரங்களுக்கான Swachh Vayu Survekshan 2026 பட்டியலில் மதுரை 39–வது இடத்தைப் பெற்றுள்ளது. குப்பைகளை எரிப்பது நகரின் காற்றுத் தரத்தைப் பாதிக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே “இந்தியாவின் குப்பை மாநகர்” என்பது அதிகாரப்பூர்வ பட்டமல்ல; மதுரையின் குப்பைப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டும் கடுமையான விமர்சனச் சொற்றொடராகவே அதைப் பயன்படுத்துவது பொருத்தமானது.

### கும்பாபிஷேகம் ஒரு வாய்ப்பு

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மாநகராட்சி ஏற்கெனவே கோயிலைச் சுற்றியுள்ள மாசி, சித்திரை, ஆவணி மூல வீதிகளில் தூய்மைப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது. பகல் நேரத்தில் சுமார் ஐந்து மணி நேர இடைவெளியில் குப்பை சேகரிப்பு, இரவுநேர தூய்மைப் பணி, தூசியை அகற்ற பிரத்யேக இயந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வீதிகளை மேம்படுத்த மாநகராட்சி ரூ.22.2 லட்சம் மதிப்பிலான பணிகளையும் திட்டமிட்டுள்ளது.

இவை வரவேற்கத்தக்கவை. ஆனால் இங்குதான் அரசுக்கும் மாநகராட்சிக்கும் மிக முக்கியமான ஒரு வேண்டுகோள் உள்ளது:

தூய்மை என்பது கும்பாபிஷேகத்திற்கான அலங்காரமாக இருக்கக் கூடாது; அது மதுரையின் நிரந்தர அடையாளமாக மாற வேண்டும்.

கோயிலைச் சுற்றிய நான்கு வீதிகளை மட்டும் சுத்தம் செய்துவிட்டு, நகரின் மற்ற பகுதிகளில் குப்பைகள் தேங்கினால் அது முழுமையான வெற்றியாகாது. பேருந்து நிலையங்கள், ரயில் நிலைய சுற்றுப்புறம், வைகை கரைகள், சந்தைகள், முக்கியச் சாலைகள், சுற்றுலாப் பயணிகள் செல்லும் வழித்தடங்கள் அனைத்தும் ஒரே தரத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

### முதல்வர் விஜய் அரசுக்கு ஒரு வாய்ப்பு

இந்தக் கும்பாபிஷேகம் தற்போதைய தமிழக அரசுக்கும் மதுரை மாநகராட்சிக்கும் ஒரு நிர்வாகத் தேர்வாக அமைகிறது. ஒரு வாரத்தில் நகரத்தின் தோற்றத்தை மாற்றுவது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் அந்தத் தூய்மையை அடுத்த ஒரு வருடமும் காப்பாற்றுவதுதான் உண்மையான சாதனை.

அரசு உடனடியாக “தூய்மை மதுரை கும்பாபிஷேகம் 2026” என்ற ஒருங்கிணைந்த சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். கோயிலை மையமாகக் கொண்டு முக்கிய சாலைகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் 24 மணி நேர தூய்மைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

குப்பை சேகரிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை தற்காலிகமாக அதிகரிப்பதுடன், ஈரக்கழிவுஉலர்கழிவு தனித்தனியாக சேகரிக்கப்பட வேண்டும். திறந்தவெளியில் குப்பை கொட்டுவதற்கும் எரிப்பதற்கும் கடுமையான கண்காணிப்பு அவசியம்.

கும்பாபிஷேகத்தின்போது உணவு, அன்னதானம், குடிநீர் வழங்குபவர்களுக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விதிமுறைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக், உணவுக் கழிவு, குடிநீர் பாட்டில்கள் ஆகியவற்றை உடனுக்குடன் அகற்றுவதற்கான தனி அமைப்பும் தேவை.

### மழை வந்தால் மதுரை தயாரா?

கும்பாபிஷேக ஏற்பாடுகளுக்கு இன்னொரு சவால் மழை. சமீபத்திய கனமழையில் கோயில் சுற்றுப்புறம் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் தேக்கம் மற்றும் சேறும் சகதியும் ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நீர் தேக்கத்தை விரைவாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இதனால் மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் கால்வாய்கள், சாலையோர வடிகால்கள் ஆகியவற்றை இப்போதே முழுமையாகச் சோதிக்க வேண்டும்.

ஏழு லட்சம் பக்தர்கள் கூடும் நேரத்தில் ஒரு மணி நேர மழையே போக்குவரத்தையும் நடைபாதைகளையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும். எனவே “மழை பெய்தால் என்ன செய்வது?” என்ற மாற்றுத் திட்டமும் நிர்வாகத்திடம் தயாராக இருக்க வேண்டும்.

### பக்தர் மதுரைக்கு விருந்தினர்

வெளிமாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் மதுரைக்கு வருவது வழக்கம். கும்பாபிஷேக நாளில் இந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும்போது ஒவ்வொரு பயணியையும் “மதுரையின் விருந்தினர்” என்ற மனநிலையில் நடத்த வேண்டும்.

தெளிவான தமிழ் ஆங்கில வழிகாட்டிப் பலகைகள், குடிநீர் மையங்கள், இலவச மற்றும் சுத்தமான கழிப்பறைகள், மருத்துவ உதவி மையங்கள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு உதவி மையங்கள் ஆகியவை எளிதில் அடையாளம் காணக்கூடிய இடங்களில் இருக்க வேண்டும்.

பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்ய தடையற்ற குடிநீர் மற்றும் முறையான சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட நிர்வாகமும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

### குப்பையை அகற்றுவது மட்டும் தூய்மை அல்ல?

நகரத் தூய்மையை குப்பை அள்ளுவதோடு மட்டும் சுருக்கிவிடக் கூடாது.

சாலையோர ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்துதல், கழிப்பறைகளை சுத்தமாக வைத்தல், சாக்கடை மூடிகளைச் சரிசெய்தல், தெருவிளக்குகளை இயங்கச் செய்தல், நடைபாதைகளைப் பாதுகாத்தல், தூசி கட்டுப்பாடு, போக்குவரத்து ஒழுங்கு, உணவகங்களின் சுகாதாரம்—இவை அனைத்தும் “தூய்மை மதுரை” என்ற ஒரே இலக்கின் பகுதிகளாக இருக்க வேண்டும்.

இதற்காக மாநகராட்சி, மாவட்ட நிர்வாகம், காவல்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத் துறை, அறநிலையத் துறை ஆகியவை தனித்தனி தீவுகளாக இயங்காமல் ஒரே கட்டுப்பாட்டு மையத்தின் கீழ் செயல்படுவது பயனுள்ளதாக இருக்கும்.

### மக்களுக்கும் பொறுப்பு உண்டு?

எல்லாவற்றையும் அரசிடம் மட்டும் எதிர்பார்க்க முடியாது.

“என் வீட்டுக்கு வெளியே போட்டால் போதும்” என்ற மனநிலை மாறாமல் எந்த மாநகராட்சியாலும் நகரத்தை நிரந்தரமாகத் தூய்மையாக வைத்திருக்க முடியாது.

வியாபாரிகள் கடை முன் குப்பை கொட்டக்கூடாது. பக்தர்கள் பிளாஸ்டிக், உணவுப் பொட்டலங்களை சாலையில் வீசக்கூடாது. அன்னதானம் வழங்குபவர்கள் தங்கள் இடத்தைத் தாங்களே சுத்தப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

அரசு சுத்தம் செய்ய வேண்டும்; மக்கள் சுத்தத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இதுவே நிலையான தீர்வு.

### கும்பாபிஷேகத்திற்குப் பிறகும் தொடரட்டும்!

செப்டம்பர் 17 முடிந்ததும் கூடுதல் குப்பை வாகனங்கள் மறைந்து விடக்கூடாது. சிறப்பு தூய்மைப் பணியாளர்கள் திரும்பப் பெறப்பட்டு பழைய நிலை மீண்டும் உருவாகக்கூடாது.

கும்பாபிஷேகத்தை ஒரு நாள் நிகழ்ச்சியாகப் பார்க்காமல் “புதிய மதுரையின் தொடக்க நாள்” என்று அரசு அறிவிக்கலாம்.

மாதந்தோறும் ஒவ்வொரு வார்டுக்கும் தூய்மை மதிப்பெண் வழங்கலாம். பொதுமக்கள் புகைப்படத்துடன் குப்பைப் புகார் அளிக்க எளிய வசதி ஏற்படுத்தலாம். புகார் வந்ததும் எத்தனை மணி நேரத்தில் அகற்றப்பட்டது என்பதை பொதுமக்கள் பார்க்கும் வகையில் வெளிப்படையான கண்காணிப்பு அமைப்பையும் உருவாக்கலாம்.

சிறப்பாக செயல்படும் வார்டுகள், தூய்மைப் பணியாளர்கள், சந்தைகள், வணிக நிறுவனங்கள், குடியிருப்போர் சங்கங்கள் ஆகியவற்றைப் பாராட்டலாம்.

அப்போதுதான் தூய்மை ஒரு “அரசுத் திட்டம்” என்பதிலிருந்து “மதுரையின் மக்கள் இயக்கம்” என்ற நிலைக்கு உயரும்.

### மீனாட்சியின் நகருக்கு வேண்டியது இதுதான்!

17 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் மகா கும்பாபிஷேகம் மதுரையின் ஆன்மிக வரலாற்றில் முக்கியமான தருணம்.

லட்சக்கணக்கான பக்தர்கள் கோபுரங்களை அண்ணாந்து பார்த்து வியக்க வேண்டும். அதே நேரத்தில் சாலையில் நடக்கும்போது முகம் சுளிக்க வேண்டியநிலை ஏற்படக்கூடாது.

அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பும்போது,

“மீனாட்சியம்மன் கோயில் அற்புதம்” என்று மட்டும் சொல்லாமல்,

“மதுரையும் மிகவும் சுத்தமாக இருந்தது”

என்று சொல்ல வேண்டும்.

அதுவே இந்தக் கும்பாபிஷேகத்திற்கு தமிழக அரசும் மதுரை நிர்வாகமும் அளிக்கக்கூடிய மிகச் சிறந்த நிர்வாகக் காணிக்கையாக இருக்கும்.

கோபுரங்களால் உலகை ஈர்த்த மதுரை, தூய்மையாலும் உலகை ஈர்க்கட்டும்!

“குப்பை மாநகர்” என்ற விமர்சனம் மறைந்து,

“தூய்மை மாநகர் மதுரை” என்ற புதிய அடையாளம் பிறக்கட்டும்!

– ஆசிரியர்
மதுரை மணி நாளிதழ்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020